**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 58/2025**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சங்கரன் (PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது மலையம்பாளயைம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் கடந்த 2024ம் வருடம் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 20.04.2024ம் தேதி மலையம்பாளையம் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது மது குற்ற வழக்கை தடுக்கும்பொருட்டு முதல்நிலை காவலர் சோமசுந்தரம் 2859 மற்றும் உதவி ஆய்வாளர் திரு.நடராஜன் ஆகியோருடன் சோளங்காபாளையம், SKM முட்டை கம்பெனி அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். உதவி ஆய்வாளர் திரு.நடராஜன் அவர்களுக்கு போன் மூலம் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் முத்துகவுண்டன்பாளையம் இலங்கை அகதிகள் முகாமிற்கு காலை 10.45 மணிக்கு அங்கு சென்ற போது அங்கு நிலேஷ்குமார் என்ற நபர் சந்தேகப்படத்தக்க வகையில் நின்று கொண்டிருந்தார். உதவி ஆய்வாளர் மேற்சொன்ன நபரை விசாரித்தபோது அரசு மதுபான பாட்டில்களை ஒரு அட்டை பெட்டியில் வைத்திருந்தார். (1)சுமார் 180ml அளவுள்ள Express Brandy எண்ணிக்கை 18, (2) சுமார் 180ml அளவுள்ள Diamond XXX பாட்டில்கள் எண்ணிக்கை 6 ஆகியவற்றை வைத்திருந்தார். அவர் லாபத்திற்கு விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். மேற்சொன்ன நிலேஷ்குமார் அங்கிருந்து ஓடினார், அவரை முதல்நிலை காவலர் சோமசுந்தரம் என்பவர் பிடித்தார்.உதவி ஆய்வாளர் மேற்சொன்ன பாட்டில்களை எடுத்துகொண்டார். அதை ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 180ml அளவுள்ள Express Brandy எண்ணிக்கை 18**

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.14 07:58:33 +0530

**சா.பொ.1 வரிசையாக குறியீடுசெய்யப்படுகிறது. சுமார் 180ml அளவுள்ள Diamond XXX பாட்டில்கள் எண்ணிக்கை 6 சா.பொ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**

2) பின்னர் எதிரி மற்றும் வழக்குச் சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து காலை 11.30 மணிக்கு நிலைய குற்ற எண்.84/2025 சட்டப் பிரிவுகள் 4(1)(C) TNP Actன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். வழக்கு சொத்துக்களை மகஜரில் கைப்பற்றவும் எதிரி மீது வழக்கு பதிவு செய்யவும் உதவி ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.14 07:58:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 58/2025**
**Prosecution Witness**:2

| Name | திரு. சோமசுந்தரம் (PW2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது மலையம்பாளயைம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.04.2025ம் தேதியன்று காலை 09.30 மணியளவில் நிலையத்தில் இருந்து கிளம்பி வாகன தணிக்கை செய்வதற்காக சோளங்காபாளையம் SKM முட்டை கம்பெனி அருகில் நிலைய உதவி ஆய்வாளர் திரு.நடராஜன் அவர்களுடன் நானும் மற்றும் முதல்நிலை காவலர் 2816 சங்கரன் ஆகியோர்களும் இருந்தோம். அன்று காலை 09.30 மணிக்கு வாகன தணிக்கை செய்து கொண்டிருக்கும்போது 10.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.நடராஜன் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அங்கிருந்து கிளம்பி முத்துகவுண்டன்பாளையம் இலங்கை அகதிகள் முகாம் அருகே சென்றுபார்த்தோம். அங்கு அடையாளம் தெரியாத நபர் அட்டைப்பெட்டியில் சுமார் 180 ml அளவுள்ள Express Brandy எண்ணிக்கை18, மற்றும் சுமார் 180 ml அளவுள்ள MGM Diamond XXX எண்ணிக்கை 6, மதுபானங்களை வைத்திருந்தார்.

2. அவரை விசாரித்த போது அவர் இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த நிலேஷ்குமார் த/பெ.கருணாநிதி என்று சொன்னார். அவரை 10.45 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்தார். உதவி ஆய்வாளர் அவரை விசாரித்தபோது லாபம் அடையும் நோக்கோடு மேற்சொன்ன மதுபாட்டில்களை வைத்திருந்ததாக கூறினார். அன்று காலை 11.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்சொன்ன மதுபானபாட்டில்களை உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.14 07:58:45 +0530

இரண்டாவதாக காணப்படும் கையொப்பம் என்னுடைதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து அன்று காலை 11.30 மணிக்கு எதிரி மீது நிலைய குற்ற எண்.84/2025 ச/பி.4(1)(C) TNP Act படி வழக்கை பதிவு செய்தார். எதிரியை கைது செய்யவும், எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யவும் உதவி ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.14 07:58:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.